தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 17, ஸ்ரீமுக—திருவள்ளுவர் ஆண்டு 2025

1994, மார்ச் 31, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்''

எதிர்காலத்தில் வரக்கூடிய கெடுதிகளை முன்னரே அறிந்து அவற்றினின்று தம்மைக் காத்துக் கொள்ளக் கூடிய அறிவுடையோர்க்கு, அவர்கள் வருந்தும்படியான துன்பங்கள் யாதொன்றும் இல்லை.

[குறிப்பு: —ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்.

அவை அலுவல் தொடங்கும் போது முன் அனுமதியின்றி ஒரு பிரச்சினையை எழுப்புவது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு (குறுக்கீடுகள்)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் இதிலே வராது. நீங்கள் ஒன்றும் அனுமதி கேட்கவில்லை ; நீங்கள் ஏதாவது இதுபற்றிக் கேட்க வேண்டுமென்றால், இந்த நேரத்தில் நாங்கள் கேட்க வேண்டுமென்று என்னிடத்தில் நீங்கள் முன்னரேயே சொல்லி இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) பாயின்ட் ஆஃப் ஆர்டர் இப்போது வராது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை; ஒரு வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுகோள் என்றாலும், அதையும் என்னிடத்தில் முன்கூட்டியே தெரிவித்திருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) என்னிடம் அப்படி எதையும் நீங்கள் தெரிவிக்கவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் தெரிவிக்கவே இல்லை; உண்மைக்குப் புறம்பாகச் சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்)

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜி. பழனிசாமி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : நான் அதைப் பிறகு கொண்டு வருகிறேன். இப்போது நான் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அதற்கு நீங்கள் என்னிடத்திலே அனுமதி பெற்றிருக்க வேண்டும். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது விவாதம் போகட்டும், நீங்கள் இடையிலே அது குறித்து வாருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பரிதி இளம்வழுதி, அது இந்த நேரத்தில் கிடையாது. (குறுக்கீடு) இல்லை, என்னிடத்தில் முன் அனுமதி பெற்றுத்தான் அதைக் கேட்க வேண்டும். (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, நீங்கள் கவன ஈர்ப்பிற்கு வாருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 31]

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கையின் மீது பிரதான எதிர்க் கட்சி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உங்கள் தொகுதிப் பிரச்சினை. நீங்கள் இதற்கு வாருங்கள். உங்களை அழைத் திருக்கிறேன். இல்லையென்றால், நான் அடுத்த கவன ஈர்ப் பிற்குப் போக வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) திரு. ஜி. பழனி சாமி, கவன ஈர்ப்பைக் கேளுங்கள்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுகோள்தான், ஒரு பணிவான வேண்டுகோள். ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி, நீங்கள் நாகை - காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பிரச்சினை பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முறையில்லை. என்னிடம் அனுமதி கேட்காமல், இந்த நேரத்தில் எதுவும் பேச முடியாது. (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் குறித்த பிரச்சினை யையும் எடுத்துக் கொள்ளலாம். இப்போது ஒரு வேண்டுகோள் தான்.......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் அனுமதி கேட்டுப் பேச வேண்டும் என்றிருக்கிறது. (குறுக்கீடு) திரு. பரிதி இளம்வழுதி, உங்களை முன் வரிசையில் உட்கார வைத்திருக்கிறேன். அதற்கு உரியவராக நடந்து கொள்ளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் ; வேண்டாம். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு என்னிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) திரு. ஜி. பழனி சாமி, நீங்கள் கவன ஈர்ப்பைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் பேசலாம் ; அது இல்லாதபோது, நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி, உட்காருங்கள். இது முறையல்ல, நான் அதை அனுமதிக்கப் போவதில்லை. என்னி டம் அனுமதி கேட்டு, இங்கே வந்து நான் பேரவையினுடைய நடவடிக்கைகளை ஆரம்பிக்கிறபோது, நான் இதைப் பற்றிப் பேச வேண்டுமென்று நீங்கள் அனுமதி கேட்டிருந்தால், அதை நான் அனுமதித்து இருப்பேன். அதன் பின்னர் வந்து, நீங்கள் பேசலாம். நீங்கள் பேசாமல் இருந்துவிட்டு, என்னுடைய அறைக்கு நீங்கள் வந்த போதுகூட, இன்று உள்ளாட்சி மன் றங்கள் மசோதாவின் மீது பேச வேண்டுமென்று மட்டும் கேட்டு விட்டு, இங்கே வந்து இப்படிப் பேசுவது முறையல்ல. இளம் வழுதி, உட்காருங்கள். திரு. பழனிசாமி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் அனுமதிக்க வில்லை. (குறுக்கீடு) திரு. பழனிசாமி, நீங்கள் கவன ஈர்ப்பைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் பேசலாம். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறேன். ஆனால், பிரதான எதிர்க் கட்சி (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. நீங்கள் நாகை-காயிதே மில்லத் மாவட்டம் என்று ஆரம்பித்தால் தவிர, வேறொன்றிற்கும் நான் அனுமதிப்பதாக இல்லை.

அடுத்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) நீங்கள் கவன ஈர்ப்புக் குறித்து எழுப்பவில்லை. அதைப் பேசவில்லையென்றால் வேறு எதற்கும் அனுமதிக்கப் போவதில்லை. (குறுக்கீடு) அடுத்த கவன ஈர்ப்பு, திரு. து. மூர்த்தி. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைப் பற்றி (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, நீங்கள் எழுப்புகிறீர்களா ? (குறுக்கீடு) திரு. து. மூர்த்தி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 மார்ச் 31]

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மூர்த்தி, உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி அவருடைய கவன ஈர்ப்பைக் கேட்பதாக இருக்கிறார். (குறுக்கீடு)

முற்பகல் 10-05

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி, திரு. ஜி. பழனிசாமி அவர்கள் முக்கியமான பிரச்சினை பற்றிப் பேச இருக்கிறார். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி, அப்படியில்லை. அவர் முக்கியமான பிரச்சினை பற்றிப் பேச இருக்கிறார். நீங்கள், பேரவை தொடங்குகின்றபோது நான் பேச வேண்டும் என்று என்னிடத்தில் அனுமதி கேட்டு, அதற்கு நான் அனுமதித்திருந்தால் நீங்கள் பேசலாம். இப்போது முடியாது. (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடம் 4, 5 தடவை கேட்டிருக்கிறேனே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி, அது வேண்டாம் என்று உங்களுக்குச் சொல்லிவிட்டேன். ஆனால் திரு. இளம்வழுதி அவர்கள் என்னிடத்தில் ஒன்றும் கேட்கவில்லை. (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, நீங்கள் உட்கார வேண்டும்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி, நீங்கள் உட்கார வேண்டும். மாண்புமிகு அவை முன்னவர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற முழு விவகாரத்திற்கும் காரணமே தங்களிடத்தில் அனுமதி கேட்காமல் நடந்து கொண்டதால்தான். அந்தச் சூழ்நிலை இன்றும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு தங்களைச் சார்ந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி. திரு. ஜி. பழனிசாமி, உங்களுடைய கவன ஈர்ப்பைப் பற்றிக் கேட்கிறீர்களா, இல்லையா ? (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். இது முறையில்லை. நீங்கள் முறையில்லாமல் நடந்து கொள்கிறீர்கள். (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, நீங்கள் தயவு செய்து உட்கார வேண்டும்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் என்னிடம் அனுமதி பெறாமல் பேசியதைத் தொடர்ந்துதான் பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி, உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி, உங்கள் பிரச்சினையை எழுப்பலாம். (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, நீங்கள் பேசலாம். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே,**

2. கவன ஈர்ப்பு

(அ) நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.